# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1664 - 2010 ජූලි මස 23 වැනි සිකුරාදා - 2010.07.23

*1664 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (III) - வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் | 244 |
| அமைப்புகள் பற்றிய அறிவித்தல்கள் | 245 |
| வியாபார உரிமை அடையாள அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| ஆக்க உரிமைகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| தொழிலக வடிவ அமைப்புகள் பற்றிய அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில்` பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, யூலை மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூலை மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமை அடையாள அலுவலகம்

***வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் ஆக்கவுரிமைகள் வியாபாரக்குறிகள் பதிவாளர், ஆக்கவுரிமைகள் வியாபாரக் குறிகள் பதிவகம், 'சமாகம் மெதுற', 3 ஆம் மாடி, இல. 400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.***

### பரிசோதனைக்குரிய நேரம்

***அலுவலகத்திற்குச் சொந்தமான பதிவேடுகளைப் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த கிழமை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 2.30 மணி வரையும் திறந்திருக்கும் எனினும் பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 2 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.***

### நிறங்களை வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்

***ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்ட தென்றும் விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.***

### கூட்டுச் சேர்க்கை

***1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கப் புலமைச் சொத்துச் சட்டக் கோவைச் சட்டம் 112 ஆம் பகுதியின் கீழ் பிரசுரிக் கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத் துடன் கூட்டுச்சேர்க்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந் தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்.***

### எதிர்ப்பு

***பின்வரும் வியாபாரச் சேவை அல்லது கூட்டுக் குறிகள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தமானப் பத்திரிகைத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ரூபா 750 காசாகவோ, காசோலையாகவோ, காசுக்கட்டளையாகவோ, அஞ்சற் கட்டளையாகவோ அல்லது வங்கி வரைவாகவோ செலுத்தி எம் 2 பத்திரத்தில் (அதற்கான இணைப்புப் பிரதியுடன்) எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும்.***

*(1) சின்னம் இல. : 108150 ; (2) பெற்ற திகதி : 2002 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி ; (3) முந்துரிமை கோரப்பட்டால் : - ; (4) விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் (சின்னத்தின் சொந்தக்காரர்) : ஹேமாஸ் மெனுபெக்சரிங் (பிரைவட்) லிமிட்டட், 1982 ஆம் ஆண்டின் 17 ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட கம்பனி, 36, பிரிஸ்டல் வீதி, கொழும்பு - 01- உற்பத்தியாளர்கள் ; (5) இலங்கையில் அவருக்கேதும் விலாசமிருப்பின், அது : ஹேமாஸ் மெனுபெக்சரிங் (பிரைவட்) லிமிடட், 36, பிரிஸ்டல் வீதி, கொழும்பு - 01 ; (6) வகுப்பு : 05; (7) பொருள்கள் அல்லது சேவைகள்: நுளம்புகளுக்கு எதிரான தயாரிப்புகள் ; (8)சின்னத்தின் பிரதி உருவம்:*

மொஸ்காட்

*இச்சின்னம் பதியப்பட்டாலும் பதியப்படும்போதும் 108148, 108149 ஆம் இலக்க வியாபாரச் சின்னங்களுடன் இணைந்து கொள்ளும்.*

*கலாநிதி டி. எம். கருணாரத்ன,*
*புலமைச்சொத்து பணிப்பாளர் மா அதிபதி.*

*இலங்கைத் தேசிய புலமைச்சொத்து அலுவலகம்,*
*கொழும்பு,*
*2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி.*

*7-661-23.07.2010 ஆந் திகதிய வர்த்தமானி இல. 1664.*

*(1) சின்னம் இல. : 112523 ; (2) பெற்ற திகதி : 2003 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 14 ஆந் திகதி ; (3) முந்துரிமை கோரப்பட்டால் : - ; (4) விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் (சின்னத்தின் சொந்தக்காரர்) : சுங்கன்வூல் லிமிட்டட், கொரிய குடியரசில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனி, 49-4, நொன்கையுன், கங்னம்-கு, சோல், கொரிய குடியரசு - உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் ; (5) இலங்கையில் அவருக்கேதும் விலாசமிருப்பின், அது : திரு. ஜுலியஸ் அன்ட் கிறீசி, த. பெ. எண் 154, கொழும்பு, இலங்கை ; (6) வகுப்பு : 25; (7) பொருள்கள் அல்லது சேவைகள் : கீழ் ஆடைகள், அரைக் கால்சட்டை, கீழ் சேர்ட்டுகள், கீழ் காற்சட்டைகள், மார்புக் கச்சைகள், நீச்சல் ஆடைகள், நீச்சல் மேல் ஆடைகள், குளிக்க அணியும் அரைக் கால் சட்டை, கச்சைகள், குழந்தைகள் ஆடைகள், உடற்பயிற்சிக்கான சீருடைகள், இரவு ஆடைகள், இரவு மகளிர் மேல் ஆடைகள், குளிக்க அணியும் அங்கிகள், கமிசோல் ஆடைகள், வயிற்றுக்கு அணியும் இறுக்கமான உள் ஆடைகள், இணைந்த கீழாடைகள், கை இல்லாத இறுக்கமான மேலாடைகள், பிஜாமாக்கள் ; (8)சின்னத்தின் பிரதி உருவம் :*

TRY
clean & nature

*இச்சின்னத்தின் பதிவானது, 'சுத்தம், இயற்கை'ஆகிய சொற்கள் மற்றும் & என்ற அடையாளம் ஆகியவற்றின் பிரத்தியேக பாவனைக்கு உரித்து எதனையும் அளிக்காது.*

*கலாநிதி டி. எம். கருணாரத்ன,*
*புலமைச்சொத்து பணிப்பாளர் மா அதிபதி.*

*இலங்கைத் தேசிய புலமைச்சொத்து அலுவலகம்,*
*கொழும்பு,*
*2004 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி.*

*7-786-23.07.2010 ஆந் திகதிய வர்த்தமானி இல. 1664.*

*(1) சின்னம் இல. : 79520 ; (2) பெற்ற திகதி : 1996 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி ; (3) முந்துரிமை கோரப்பட்டால் : - ; (4) விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் (சின்னத்தின் சொந்தக்காரர்) : குவோனி றீசன் ஹோல்டிங் ஏஜி, சுவிட்சர்லாந்து நாட்டுச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டு நிலைத்திருக்கும் ஒரு கூட்டுத்தாபனம், நியூ ஹார்ட் 7, 8005 சூரிச், சுவிட்சர்லாந்து - உற்பத்தியாளர்களும், வியாபாரிகளும், சேவைகள் வழங்குபவரும் ; (5) இலங்கையில் அவருக்கேதும் விலாசமிருப்பின், அது : திருவாளர் ஜுலியஸ் அன்ட் கிறீசி, த. பெ. இல. 154, கொழும்பு ; (6) வகுப்பு : 39 ; (7) பொருள்கள் அல்லது சேவைகள் : பிரயாணங்கள், சுற்றுலாக்கள், பிரயாணிகளையும் அவர்களின் பொருட்களையும் வீதி, புகையிரத, கடல், ஆகாய மார்க்கமாக ஏற்ற ஒழுங்கு செய்யும் முகவர் நிலையங்களும் உல்லாசப் பிரயாணிகளுக்கான சுற்றுலா பயணங்களை ஒழுங்கு செய்தலும் பிரயாணக் கட்டணம் தொடர்பான சேகரிக்கப்பட்ட தகவல்களும் மீள வழங்கும் சேவைகள், வாகனங்கள் வாடகைக்கு விடல், பிரயாணிகள் அல்லது யாத்திரிகளுக்கு வழி காட்டுதல், பிரயாணங்களுக்கான ஆசனங்களையும் கப்பல் அறைகளையும் பதிவு செய்தல் ; (8)சின்னத்தின் பிரதி உருவம் :*

KUONI

*இந்தச்சின்னத்தின் பதிவானது, அதில் தோன்றும் பூகோள உருண்டையின் வடிவத்தை தனியாக உபயோகிக்க உரிமை வழங்கவில்லை.*

*கலாநிதி டி. எம். கருணாரத்ன,*
*ஆக்கவுரிமைகள், வியாபாரக் குறிகள் பதிவாளர்.*

*ஆக்கவுரிமைகள், வியாபாரக் குறிகள் பதிவகம்,*
*கொழும்பு,*
*1996 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி.*

*7-788-23.07.2010 ஆந் திகதிய வர்த்தமானி இல. 1664.*

## வியாபார உரிமை அடையாள அறிவித்தல்கள்

*பிழை*

*22.09.2000 ஆந் திகதியதும் 1151 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் வகுப்பு 08 இல் உள்ள 76318 ஆம் இலக்க வியாபார சின்னம் தொடர்பாக அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-*

*(8) சின்னத்தின் பிரதி உருவம் :*




*கலாநிதி டி. எம். கருணாரத்ன,*
*புலமைச்சொத்து பணிப்பாளர் மா அதிபதி.*

*இலங்கைத் தேசிய புலமைச்சொத்து அலுவலகம்,*
*"சமாகம் மெதுற",*
*3வது தளம்,*
*400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,*
*கொழும்பு 10,*
*2001 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி.*

*7-787*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*